# கல்வி, அறிவுலகப் பயன்பாட்டில் காகிதச் சுவடிகள்

***முனைவர் த. ஆதித்தன்***
அரிய கையெழுத்துச் சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: செப்டம்பர்**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5776

***ஆய்வுச்சுருக்கம்***
*எழுத்துப் பொறிக்கப்பட்ட பொருட்கள் வரலாற்றுச் சான்றுகள் எனப்பட்டன. வரலாற்றுச் சான்றுகளுள் கல்வெட்டு, செப்பேடு, நாணயங்கள், ஓலைச்சுவடி போன்று காகிதச் சுவடியும் ஒன்றாகும். ஏறத்தாழ நானூறு ஆண்டுகால வரலாற்றினைத் தாங்கியனவாகக் காகிதச் சுவடிகள் திகழ்கின்றன. காகிதச் சுவடிகள் நமது முன்னோடிகளின் இலக்கிய, இலக்கண, மருத்துவ, சோதிட, வானியல், வரலாற்றுப் படைப்புகளை உள்ளடக்கியனவாகும். இவற்றை முறையாகச் சேகரித்து, பதிப்பித்து ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இலக்கிய, இலக்கணங்கள் என்ற நிலையில் மட்டுமன்றி மக்களின் பண்பாட்டு வரலாற்றை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் முதன்மையான பங்கினையுடையனவாகக் காகிதச் சுவடிகள் திகழ்கின்றன. இத்தகைய காகிதச் சுவடிகள் கல்வி, அறிவுலகப் பயன்பாட்டில் பெரிதும் துணை நிற்பதை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.*

***முதன்மைச் சொற்கள்*** (Key Words): *சுவடி – ஓலைச்சுவடி – காகிதச் சுவடி – காகிதச் சுவடி ஆய்வுகள் – நூற்பதிப்பு – மெக்கன்சி சுவடி – வரலாற்று ஆவணம்.*

## முன்னுரை

அறிவுலக வளர்ச்சியில் முதன்மையான இடம் சுவடிகளுக்கு உண்டு. பண்டைய காலத்தில் சுடுமண், மரப்பட்டை, தோல், துணி, கல், செம்பு, வெள்ளி, தங்கம், சுவடி போன்றவற்றில் எழுதும் வழக்கம் இருந்தாலும் அவற்றுள் சுவடிகளுக்குத் தனித்த இடம் உண்டு. இச்சுவடி என்னும் சொல் ஆங்கிலத்தில் Manuscripts என்று வழங்கப்படுகிறது. இச்சுவடி என்ற சொல்லைக் கேட்ட உடனேயே பலருக்கும் ஓலைச் சுவடிகள்தான் நினைவுக்குவரும். ஆனால் Palm Leaf Manuscripts என்றால்தான் ஓலைச் சுவடிகள். அதேபோலவே Paper Manuscripts என்பதை காகிதச் சுவடிகள், தாள் சுவடிகள், கையெழுத்துச் சுவடிகள் போன்ற பெயர்களால் அழைக்கிறோம். இக்காகிதச் சுவடிகள் பண்டைய எழுதுபொருள்களுள் ஒன்றாகவும், சமூகப், பொருளாதார, அரசியல், பண்பாட்டு வரலாறுகளை எடுத்துரைக்கும் வரலாற்றுச் சான்றுகளாகவும் திகழ்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த காகிதச் சுவடிகளின் தோற்றம், வளர்ச்சி முதன்மை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## தோற்றமும் வளர்ச்சியும்

அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்பே அச்சு நூல்கள் கல்வி முறையில் இடம் பிடித்தன. பழைய கல்வி முறையில் அதாவது பழங்காலத்திலும், இடைக் காலத்திலும் சுவடிகளே அச்சு நூல்களின் இடத்தை நிரப்பியிருக்கின்றன. பிந்தைய நானூறு ஆண்டுகளாகக் காகிதச் சுவடிகள் தமிழ் மக்களால் எழுதுபொருள் ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை நம்மவர்களின் நானூறு ஆண்டுகால அரசியல், பொருளாதாரச், சமூக வரலாற்றைத் தாங்கியவைகளாக உள்ளன. நம் முன்னோர்களின் இலக்கிய, இலக்கண, மருத்துவ அறிவைத் தாங்கியனவாகவும் காணப்படுகின்றன.

இந்த காகிதங்களை முதன் முதலில் சீனர்கள் தான் கண்டுபிடித்ததாகக் கூறி வருகிறோம். ஆனால் அதற்கு முன்னரே இந்தியர்கள் காகிதத்தினைக் குறித்த அறிவினைப் பெற்றிருந்ததோடு, பயன்படுத்தவும் செய்துள்ளனர். அலெக்சாண்டர் இந்தியாவின் மீது கி.மு.327இல் படையெடுத்தார். அவரின் தளபதிகளில் ஒருவரான நிரசூஸ் (Nearchus) இந்தியர்கள் பஞ்சில் இருந்து காகிதம் செய்துள்ளதைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.[1] இதன் மூலம் காகிதத்தை மிக தொன்மையான காலத்திலேயே இந்தியர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. அதற்கு அடுத்த நிலையில் கி.மு.75 இல் இருந்து சீனர்கள் காகிதங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.[2] சீனர்களுடன் வணிக ரீதியிலான உறவினைக் கொண்டிருந்த அரேபியர்கள் சீனர்கள் மூலமாகக் காகிதத்தின் பயன்பாட்டை அறிந்திருக்க வேண்டும். பின்னர் மத்திய ஆசியா, ஐரோப்பா என பரவியிருக்கிறது.

ஐரோப்பியாவில் ஏற்பட்ட தொழில் புரட்சியும் அச்சு இயந்திரத்தின் கண்டு பிடிப்பும் காகித ஆலைகள் பெருகவும், காகிதத்தின் பயன்பாடு அதிகரிக்கவும் காரணமாயிற்று.

இந்தியாவை ஆங்கிலேயர்கள் கட்டுப் பாட்டில் கொண்டுவந்தபோது அவர்கள் பராமரித்த பதிவேடுகள், கணக்கு வழக்குக் குறிப்புகள், காகிதங்கள் போன்றவற்றை எழுதுவதற்குக் காகிதங்களையே பயன்படுத் தியுள்ளனர். இதன்மூலம் நமது நாட்டில் காகிதத்தின் பயன்பாடு அதிகமாயிற்று.

காகிதச் சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும் காகிதத்தின் கண்டுபிடிப்பு, அச்சு இயந்திரத்தின் வருகை இவ்விரண்டையும் சார்ந்ததாகும். இவை இரண்டும் நமது நாட்டில் அதிக பழக்கத்திற்கு வந்த காலத்தை அடியொற்றியே இவ்வரலாறானது அமையும். இக்காகிதச் சுவடிகளைப் பொறுத்தவரையில் நமது நாட்டில் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன. அவை இரண்டு நிலைகளில் காணப்படுகின்றன. ஓலைச் சுவடிகளில் இருந்து படியெடுக்கப்பட்டவை. மற்றொன்று மூலமாகக் காகிதத்தில் எழுதி வைக்கப்பட்டவை. இதில் முதலில் சொன்னது கையெழுத்துப் படி (Copied Volume) என்றும் அடுத்தது கையெழுத்துச் சுவடி (Paper Manuscripts) என்றும் அழைக்கப்படும்.

## காகிதச் சுவடிகளின் வகைகள்

காகிதச் சுவடிகளை அறிஞர்கள் பொது வாக இரண்டு வகையாகப் பகுக்கின்றனர். ஒன்று பிரதி செய்யப்பட்டவை, அடுத்தது மூலமே காகிதத்தில் அமைவன. இவற்றுள் பிரதி செய்யப்படுபவை பொதுவாக இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் போன்ற வகைக்குள் அடங்கிவிடும். ஆனால் மூலமான காகிதச் சுவடிகள் கடிதம், அயல்நாட்டார் குறிப்பு, ஆவணம், வாக்குமூலம், பதிவேடு, நாட்குறிப்பு, அறிக்கை என பல்வேறு வகைமைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

*தமிழகத்தில் கிடைக்கப்பெறுகின்ற காகிதச் சுவடிகளை அவற்றின் உள்ள டக்கத்தின் அடிப்படையில் வரலாற்று அறிஞர்களால் ஐரோப்பியர் காலத் தமிழகம் பற்றியவை, தமிழர்களின் வரலாறு பண்பாடு பற்றியவை என மேலும் இருவகைகளாகப் பகுக்கின்றனர்.*

### காகிதச் சுவடி ஆய்வுகள்

*இன்று காகிதச் சுவடிகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டு பல ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. சான்றாக, காலின் மெக்கன்சியின் சுவடிகளைச் சொல்லலாம். வரலாற்றுச் செய்திகளை அரிதின் முயன்று சேகரித்து ஓலைச் சுவடிகள், காகிதச் சுவடிகளின் துணையோடு ஆவணப்படுத் தியவர் அவர். பலர் மெக்கன்சி சுவடிகளை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர். ம. இராஜேந்திரனின் பழவேற்காடு கி.பி.1816 என்னும் நூல் முழுக்க முழுக்க மெக்கன்சி சுவடிகளிலிருந்து கிடை க்கப்பெற்றத் தரவுகளால் ஆன நூலாகும். இது குறித்து அந்நூலின் அணிந்துரையில் இ. சுந்தரமூர்த்தி மெக்கன்சி தொகுத்த சுவடிகளுள் ஒன்று பழவேற்காடு கைபீது என்னும் சுவடியாகும். இச்சுவடியை ம. இராஜேந்திரன் அவர்கள் விரிவான ஆராய்ச்சி முன்னுரையோடு பதிப்பித் துள்ளார். அக்காலத் தமிழகத்தின் அரசியல் சமுதாய நிலைகளை அறிந்துகொள்ள இச் சுவடி பெரிதும் பயன்படுகின்றது[3] என்கிறார் பலர் மெக்கன்சி சுவடிகளை ஆராய்ந்து முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர்.*

*இலக்கிய, இலக்கண நூற்பதிப்புகளிலும் காகிதச்சுவடிகளின்பங்கு முதன்மையானது. ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கி பதிப்பிப்பதற்குக் காகிதச் சுவடிகள் பலவும் துணைநின்றுள்ளன.*

*1933 இல் வ.உ.சி அவர்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பதிப்பித்தார். இப்பதிப்பிற்கு அவர் த.மு. சொர்ணம் பிள்ளை கடிதச் சுவடி, தி.நா. சுப்பிரமணிய ஐயர் கடிதப்பிரதி, எஸ்.வையாபுரிப் பிள்ளை கைப்பிரதி என்கிறவாறு மூன்று காகிதச் சுவடிகளைப் பயன்படுத்தியுள்ளார்.*

*1937 இல் உ.வே.சா வெளியிட்ட குறுந்தொகை மூலமும் உரையும் சிறப்பு வாய்ந்தது. அப்பதிப்பிற்கு உ.வே.சா எடுத்துக் கொண்ட சுவடிகள் பத்து. அவற்றுள் மூன்று காகிதச் சுவடிகள் ஆகும். திருமயிலை சண்முகம்பிள்ளை காகிதச் சுவடி, புதுக்கோட்டை ராதாகிருஷ்ண ஐயர் கடிதச் சுவடி, திருகோண மலை த.கனகசுந்தரம்பிள்ளை கடிதச் சுவடி[5] ஆகிய மூன்று கடிதச் சுவடிகளை உ.வே.சா குறுந்தொகையின் பதிப்பிற்குப் பயன்படுத்தியுள்ளதனை அறியமுடிகிறது.*

*இதேபோன்று ஏராளமான காகிதச் சுவடிகள் இலக்கிய, இலக்கண நூற்பதிப்பில் முதன்மையான பங்காற்றியிருக்கின்றன.*

*இவை மட்டுமன்றி நிலவுடமை பத்திரப் பதிவு ஆவணங்கள், ஏசு சங்க ஆவணங்கள், மோடி எழுத்துருவிலான மராட்டியர் ஆவணங்கள், இந்திய அலுவலக ஆவணங்கள், போன்ற காகிதச் சுவடிகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.*

*தமிழக வரலாறு (1565-1967) எழுதிய கு. ராஜய்யர் காகிதச் சுவடிகள் குறித்து எழுதும்போது, இயேசு சபையினர் எழுதிய மடல்கள், அரசவைப் புலவர்களால் எழுதப்பட்ட காலக்கிரம நிகழ்ச்சிக் குறிப்புகள், சிறிய கதைப் பாடல்கள், ஐரோப்பிய வணிகர்களின் பண்டகச் சாலை குறிப்பேடுகள் போன்றவை இலக்கியச் சான்றுகளுள் குறிப்பிடத்தக்கவை ஆகும்[6] என்கிறார். இதில் கு.ராஜய்யர் காகிதச் சுவடிகளை இலக்கியச் சான்றுகள் என்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.*

*மொத்தத்தில் ஏறத்தாழ நானூறு ஆண்டுகளின் சமூகப், பொருளாதார, அரசியல், பண்பாட்டு வரலாற்றினை அறிந்துகொள்வதற்குக்*

காகிதச் சுவடிகள் பெரும் பங்காற்றுகின்றன. இக்காகிதச் சுவடிகளின் உள்ளடக்கம், பதிப்பு நிலை குறித்த ஆய்வுகள் இன்னும் முழுமையாகச்செய்துமுடிக்கப்படவில்லை. ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய பரந்து பட்ட களமாகவும் உள்ளது. இவற்றை முறையாக ஆய்வுக்குட்படுத்தும் போது புதிய வரலாற்று முடிவுகள் கூட கிடைக்கக்கூடும்.

### தொகுப்புரை

1. வரலாற்று ஆய்வுக்கு உதவும் கல்வெட்டு, செப்பேடு, நாணயங்கள், ஓலைச் சுவடிகள் போன்ற சான்றாதாரமாகக் காகிதச் சுவடிகள் உள்ளன.
2. இவற்றுள் காகிதச் சுவடிகள் அண்மைக்காலச் சான்றாதாரங்களாகவும், பிற பண்டைய சான்றாதாரங்களாகவும் திகழ்கின்றன.
3. சுவடியியல் என்பது ஓலைச் சுவடிகளை மட்டுமின்றி காகிதச் சுவடிகளையும் உள்ளடக்கியதாகும்.
4. ஓலைச் சுவடிகளில் இருந்து படியெடுக்கப்பட்ட காகிதச் சுவடிகள், மூலமாகவே காகித்ததில் எழுதி வைக்கப்பட்ட காகிதச் சுவடிகள் என காகிதச் சுவடிகள் இரண்டு நிலைகளில் காணப்படுகின்றன.
5. தமிழின் செம்மொழித் தகுதிக்கு அடிப்படையாக இருப்பது இலக்கண, இலக்கியங்கள். அவற்றின் மூலங்கள் சுவடிகள். இவற்றைப் பதிப்பிப்பதில் காகிதச் சுவடிகள் பெரும் பங்காற்றியுள்ளன.
6. இலக்கிய, இலக்கணங்கள் மட்டுமின்றி காகிதச் சுவடிகளில் வரலாற்று ஆவணங்களும் அதிகமாக உள்ளன.
7. காகிதச் சுவடிகள் எழுது பொருள் ஊடகங்களுள் ஒன்றாகத் திகழ்வது மட்டுமன்றி அரசியல், சமூகப், பண்பாடு வரலாற்றினை எடுத்தியம்பும் அறிவுலக ஆவணமாகவும் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

### சான்றெண் விளக்கம்

1. பெருமாள், ப. சுவடிப் பாதுகாப்பு வரலாறு, கோவிலூர் மடாலயம், கோவிலூர் 2012, ப.76.
2. மேலது, ப.75.
3. இராஜேந்திரன், ம. பழவேற்காடு கி.பி.1816, தமிழ்ப் பல்கலைக்கழகம், 2004, அணிந்துரை, ப.2.
4. இளங்குமரன், இரா. சுவடிப் பதிப்பியல் வரலாறு, மெய்யப்பன் பதிப்பகம், தமிழாய்வகம், சிதம்பரம், 2001, ப.159.
5. மேலது, ப.250.
6. ராஜய்யர், கு. தமிழக வரலாறு (1565-1967), தமிழரசி பப்ளிக் ஒர்க்ஸ், மதுரை, 1980, ப.3.